Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 29 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 140

கோடம்பாக்கத்தில் புதிய பொழுதுபோக்கு இடம்



சென்னை – 29 நவம்பர், 2026 கோடம்பாக்கம் ரயில்வே பார்டர் சாலையில் உள்ள ரங்கராஜபுரம் மேம்பாலத்தின் கீழ்ப்பகுதிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி புதிய தோற்றம் அளித்துள்ளது. குழந்தைகள் விளையாடும் பகுதி, உடற்பயிற்சி உபகரணங்கள், இருக்கைகள், விளக்குகள், பசுமைச் சூழல் ஆகியவற்றுடன் அந்த இடம் பொழுதுபோக்கு வெளியாக மாற்றப்பட்டுள்ளது. ரயில் பாதையை ஒட்டிய காம்பவுண்ட் சுவரில் ஓவியங்களும் வரையப்பட்டு அழகூட்டுகின்றன.

இந்தப் பணிகள் ரூ.3.63 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டதாக மாநகராட்சி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். “இந்த இடத்தை முன்பு மெக்கானிக் கடைகள் தங்கள் பணியிடமாகப் பயன்படுத்தி வந்தன. அவை அனைத்தும் அகற்றப்பட்டு, இடம் புதுப்பொலிவுடன் சீரமைக்கப்பட்டுள்ளது” என்றார் அவர்.

புதிய பொழுதுபோக்கு இடமாகப் பார்ப்பதால் இப்பணியைப் பொதுமக்கள் வரவேற்கின்றனர். ஆயினும், படேல் தெரு அருகிலுள்ள பகுதி இன்னும் மெக்கானிக் கடைகளின் ஆக்கிரமிப்பிலேயே இருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.